In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமண விழா மலர்

மணமக்கள்

சிரஞ்சீவி. S.ராஜா (எ) மயில்சாமி

சௌபாக்கியவதி. G. உமாமகேஸ்வரி

இடம்

சீனியப்பா நாடார் பழனியம்மாள் மஹால்

மானாமதுரை

நாள்

17.04.2006 - திங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண். - 8

ஸ்ரீ ஹரதத்தாசாரியார் அருளிய

சுலோக பஞ்சகம்

மாதவச் சிவஞான சுவாமிகள் செய்த மொழிபெயர்ப்புடன்

பொழிப்புரை

டாக்டர்.ஸ்ரீ. T. கணேசன்

French Institute of Pondicherry

பாண்டிச்சேரி

வெளியீடு

ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்

சென்னை.

2006

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पञ्चरत्नमालिका

गायत्रीवल्लभत्वाद्दशरथतनयस्थापिताराधितत्वा
च्छौरेः कैलासयात्रावृतमुदिततयाभीष्टसन्तानदानात् ।
नेत्रेण स्वेन साकं दशशतकमलैर्विष्णुना पूजितत्वात्
तस्मै चक्रप्रदानादपि च पशुपतिः सर्वदेवप्रकृष्टः ॥

कन्दर्पध्वंसकत्वाद्गरलकबलनात् कालगर्वापहत्वा
द्दैतेयावासभूतत्रिपुरविदलनाद्दक्षयागजयित्वात् ।
पार्थस्य स्वास्त्रदानान्नरहरिविजयान्माधवे स्त्रीशरीरे
शास्तुः सम्पादकत्वादपि च पशुपतिः सर्वदेवप्रकृष्टः ॥

वाराणस्यां च पाराशरिनियमिभुजस्तम्भनात् प्राक्पुराणां
प्रध्वंसे केशवेनाश्रितवृषवपुषाधारितक्ष्मातलत्वात् ।
अस्तोकैर्ब्रह्मशीर्षैरनिषगलकृतालंक्रियाभूषितत्वा
द्दानात् प्रज्ञानमुक्त्योरपि च पशुपतिः सर्वदेवप्रकृष्टः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भूमौ लोकैरनेकैः सततविरचिताराधितत्वादमीषा
मष्टैश्वर्यप्रदानाद्दशविधवपुषा केशवेनाश्रितत्वात् ।
हंसक्रोडाङ्गधारिद्रुहिणमुरहरान्विष्टशीर्षाङ्घ्रिकत्वा
ज्जन्मध्वंसाद्यभावादपि च पशुपतिः सर्वदेवप्रकृष्टः ॥

वैशिष्ट्ये योनिपीठायितमुररिपुश्लिष्टभावेन शम्भोः
सस्त्रीकार्धप्रतीकायितहरिवपुषालिङ्गतत्त्वेन यद्वा ।
अप्राधान्याद्विशिष्टाद्वयसमधिगमे दानवानामरातेः
शम्भोरुत्कृष्टभावादपि च पशुपतिः सर्वदेवप्रकृष्टः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோகபஞ்சகம்

மாதவச் சிவஞானசுவாமிகளின் மொழிபெயர்ப்பு

குறிப்பு: பஞ்சரத்னமாலிகா என வழங்கப்படும் இச் சுலோகபஞ்சகத்தை மாதவச்சிவஞான சுவாமிகள் சிவஞானபோதத்திற்குத் தாம் வரைந்த சிவஞானமாபாடியம் முதற்சூத்திர உரையில் மொழிபெயர்த்துத் தந்தருளுகிறார்.

மூன்று மற்றும் நான்காம் சுலோகங்கள் சிவஞானசுவாமிகளின் மொழிபெயர்ப்பில் வரிசை மாறிக் காணப்படுகின்றன. மேலும், ஐந்தாவது சுலோகத்தைச் சுவாமிகள் மொழிபெயர்த்ததாகத் தெரியவில்லை.

உயர்கா யத்திரிக் குரிப்பொருளா கலிற்
றசரதன் மதலை தாபித்தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனாது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னாங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி

னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி

னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்

றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி

னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்

றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்

றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின்

மாநுட மடங்கலை வலிதபக் கோறலின்

மாயோன் மகடூஉ வாகிய காலைத்

தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி

னாழ்கடல் வரைப்பி னான்றோ ரநேக

ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி

னான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி

னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி

னிருவரு மன்னமு மேனமு மாகி

யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்

பிறப்பிறப் பாதி யுய்ர்க்குண மின்மையிற்

கங்கை சூழ்கிடந்த காசிமால் வரைப்பிற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோகபஞ்சகம்

பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே .

என்றிங்ஙனம் அரதத்தாசாரியர் கூறிய இவ்விருபத்திரண்டு ஏதுக்களானும் பரமசிவனே பரம்பொருளென்பது தெளியப்படுதலின் அவனே முழுவதும் ஒடுக்கி உளதாக்கும் சருவகாரணனென்பது உணர்ந்துகொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை

குறிப்பு: சிவபெருமான் ஒருவரே எல்லாக்கடவுள்களுள்ளும் தலையாயவர் என நிறுவும் இந்தச் சுலோகபஞ்சக மூலத்தில் காணப்படும் பல காரணங்கள் பல புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டவை; அவற்றுள் சில நன்கு விளக்கமுறாதலினால் அவற்றை அப்படியே ஈங்குப் பொழிப்புரையில் தந்துள்ளேன். பின்னர் வெளிவரும் பதிப்பில் அக்கதைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவான செய்திகளை எடுத்துக்கூறி விளக்கலாம் என்று எண்ணுகிறேன்.

காயத்திரி மந்திரத்தின் உட்பொருளாக விளங்குவதாலும், தசரதனின் மகனான இராமபிரான் இராமேசுவரத்தில் சிவலிங்கத் தைத் தாபித்து வழிபட்டதாலும், கண்ண பிரான் கயிலைக்குச் சென்று சிவபெரு மானைக் குறித்துத் தவமியற்றி அப்பெரு மானருளால் புகழ்பெற்று விளங்கிய ஸாம்ப னென்னும் மகனைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றதாலும், விஷ்ணு வானவர் சிவபெருமானை ஓராயிரம் தாமரை மலர்களைக்கொண்டு அர்ச்சித்து வழிபடும் போது அவருடைய பக்திமின் மாட்சியைச் சோதிக்க எண்ணி ஒருமலரை ஒளித்து வைக்கவும், விஷ்ணு அப்போது தன்னுடைய ஒருகண்ணையே தாமரைமலராகச்[1] சிவபெரு மானுக்கு அர்ப்பணித்தபோது அவரது பக்தியை மெச்சி சக்கராயுதத்தை அவருக்கு அருளியதாலும்[2], ஐவகைப் பூக்களையே அம்பாகக் கொண்ட மன்மதன் சிவபெரு மானின் தவத்தைக் கலைக்க முற்பட்ட போது தனது நெற்றிக்கண்ணால் அவனைத் தீக்கிரை-யாக்கியதாலும், தேவர்களும் அசுரர் களும் அமுது வேண்டிப் பாற்கடலைக் கடைந்த பொழுது அதிலிருந்து எல்லாவுலகங்களையும்

[1] விஷ்ணு தாமரைக்கண்ணன் என்னும் பெயர் கொண்டவர் என்பது புராணங்களில் பிரஸித்தம்.

[2] இக்கதை ஞானசம்பந்தப்பெருமானின் திருவீழிமிழலைப் பதிகத்திலும், புஷ்பதந்தர் என்னும் சிவபக்திச் செல்வரும், 7 அல்லது 8 நூற்றாண்டுகளில் வாழ்ந்தவருமான மிகப் புகழ்வாய்ந்த புலவரால் சிவமஹிம்னஸ்தவம் என்னும் ஸ்தோத்திரத்திலும் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். அச்சுலோகம் பின்வருமாறு:

ஹரிஸ்தே ஸாஹஸ்ரம் கமலபலிமாதாய பதயோ:
யதேகோனே தஸ்மிந்நிஜமுதஹரந்நேத்ரகமலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழிக்கவல்ல ஹாலாஹலமென்னும் மிகக்கொடிய விஷம் தோன்ற, அதைக்கண்டு ஏனைத் தேவர்களும் அசுரர்களும் அச்சத்தால் நடுங்க, கருணையே உருவான சிவபெரு மான் மூவுலகங்களையும் காக்க எண்ணி அக் கொடிய விஷத்தைத் தான் உண்டதாலும், மார்க்கண்டேயன் என்னும் சிவபக்தி மிகுந்த பாலகனின் உயிரை வாங்க யமன் வந்தபோது அச்சிறுவன் சிவபெருமானைத் தஞ்சம் புகவும், சிவபெருமான் யமனைத் தனது இடக்காலால் உதைத்து அவனுயிரை மாய்த்ததாலும், திரிபுர அரக்கர்களை அழிப்பதற்காக மேருமலை யையே வில்லாக எடுத்ததாலும், தக்ஷன் சிவ பெருமானை அவமதித்து அவர்க்கு அவிர்ப் பாகம் கொடாமல் மற்றைத் தேவர்களுக்குத் தன்னுடைய யாகத்தில் அவிர்ப்பாகம் கொடுத்த போது வீரபத்திர உருவம் தாங்கி அந்த யாகத்தை அழித்ததாலும், தனஞ்ஜய னான அருச்சுனன் பாரதப் போரில் வெற்றி பெறுவதற்காகச் சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றவும், அத்தவத்தை மெச்சி அவனுக் குத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னுடைய பாசுபதாஸ்திரமென்னும் மிக உயர்ந்த அஸ்திரத்தைக் கொடுத்ததாலும், ஹிரண்யகசிபு என்னும் அரக்கனைக் கொன்று அவனுடைய மகனான பிரஹ்லா தனுக்கு அருள்புரிய விஷ்ணு நரஸிம்ஹ மென்னும் அவதாரத்தை எடுத்துப் பின் அக் கோபத்தால் உலகங்களை அழிக்க முற்பட்ட போது சிவபெருமான் சரபனென்னும் உருவத்தைத் தாங்கி அவரை அடக்கிய தாலும், தாருகாவனத்து முனிவர்கள் சிவபக்தி மில்லாமல், யாகங்களை மட்டுமே செய்து வந்த போது அவர்களின் தவவலிமையைச் சோதிக்க எண்ணி விஷ்ணுவானவர் மோஹினி என்னும் அழகிய பெண்ணுருவம் தாங்கி வரவும், சிவபெருமான் பிக்ஷாடன உருவம் கொண்டு முனிவர்களை மயக்கி முடிவில் அவர்களுக்குச் சிவபக்தியை உபதேசித்துப் பின்னர் மோஹினி உருக்கொண்ட விஷ்ணு வினிடத்தில் சாஸ்தா என வழங்கப்படும் ஐயனாரைப் பெற்றதாலும், வாராணஸி எனப் புகழ்பெற்ற காசிமாநகரில் வியாஸமுனிவர் பொய் சொன்னபோது அவருடைய கையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசையமுடியாதபடி வலுவிழக்கச் செய்த தாலும், கடல் சூழ்ந்த இவ்வையகத்தில் எண்ணற்றவர்கள் தூய அன்புகொண்டு வணங்கிப்போற்றுவதாலும், அப்பக்தர் களுக்கு அணிமா, மஹிமா முதலிய எட்டு விதமான ஐசுவரியங்களை அருளுவதாலும், பத்து அவதாரங்கள் எடுத்த விஷ்ணு ஒவ் வொரு அவதாரத்திலும் சிவபெருமானை வணங்கி வழிபட்டதாலும், பிரம்மாவும் விஷ்ணு வும் சிவபெருமானுடைய அடியையும், முடியை யும் காண்பதற்காக முறையே அன்னப்பறவை யாகவும், பன்றியாகவும் உருக்கொண்டு தேடும்போது மூவுலகங்களிலும் வியாபித்த அனற்பிழம்பாகச் சிவபெருமான் நின்றதாலும், எல்லா உயிர்களுக்கும் உரித்தான பிறத்தல் இறத்தல் ஆகிய இரு குணங்களும் இல்லா ததாலும், முப்புரங்களை எரித்து அழித்த போது கேசவனாகிய விஷ்ணுவினால் காளை வடிவம் கொண்டு இவ்வுலகங்களைத் தாங்கி யதாலும், பிரம்மாவின் தலையைக் கொய்து அதை மாலையாக அணிந்ததாலும், தன்னைப் பக்தியுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிபடுவோருக்கு ஞானத்தையும் அதன் பலனாக முத்திப் பேற்றையும் அளிப்ப தாலும் பசுபதி என்னும் பெயர்பெற்ற சிவபெரு மான் ஒருவரே எல்லாத் தேவர்களுள்ளும் உயர்ந்தவர் என்று கற்றறிந்தவர்கள் யாவரும் தெளிவாக உணரவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழுக்கு பாடுகள்

உடல் ரதி உவுகா

① மாயதீர் வலுகுகாடிமாம தநய ஸ்வாமிதாராயித கூவாக
சமணாசாரி கைலாச யாத்ரா ஸ்ருத ஊஜிதயாக ஸ்ரீக
சதுராநாநாக ।
சதுரத்ரண ஸ்ருங் வாகம் சிவ மதகல மைலு ஸ்ரீஸ்ரீ நா
ஸ்ரீஜிதகூவாக
தினைஸ் சுக்ர ஸ்ரதாநாசி ச சமுசத்: ஸமஸ்ரைக ஸ்ரதஸ்ரீ:।

② கருடஸ்ரீ ஸகுகூவாதூர @ கைல நாக கால முஸ்ரா ஸ்ரநாகூக
வாதி தையா வாஸ ஸ்ரீத் ஸ்ரீ ஸ்ரீ சிவ @ நாதீ கூழ் யாம ஜுயிகூவாக்।
உடல் ஸ்ரீ ஸ்ரீ தாநாஸ்ரா ஸ்ரா ஸ்ரீ ஜுயாஸ்ரீ நாஸ்ர
தீர் ஸாஸ்ரீ
தமா ஸ்ரீ: ஸ ஸ்ரீ தகூவாசி ச சமுசத்:
ஸமஸ்ரைக ஸ்ரதஸ்ரீ: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3) வாராணவ்யாம் ச உாணஸாமபரி நியபி ஹொஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ஹரா

உராதீர்ணாம்

உரஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ஹிமவைநாபீத வராஜ உஷோயாரித

- கூராதுகூராஜ் !

ச்சைஷாஷைஷ்ஷ்ஷ் ஹூ பீ தைஹ்ஹ் ரஹ்ஹ் ஹ@கூராதா@ஷ்ஷ்ஷ்

ஹீஷீதகூராஜ

ஷாஹாதீர்ஜ் ஜாஹ உஷைஷ்ஷாஸவி ச உஷோவதி:

வஷ்ஷ்ஷ்ஷ்ஷ உரகூர ஹ: ॥

4) ஹீஷைஷ ஷொஷைஷ்ஷைஷ ஷைஷ்: வஷதஷவிஷவீஷாஷாயிஷகூரா

- ஷூஷீஷா ஷ

ஹ்ஷைஷ்ஷ் ஹ்ஷ் யா ஷ்ஷ் உரஷாஹா ஷ்ஷ்ஹ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ் ஷைஷ்ஷைஹா

- ஷ்ரீஷதகூராஜ் !

ஹ்ஷ்ஷ்ஷ்ஷ் ஷைஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளிநாடு சென்று பிறமொழி கலாச்சாரத்தை

-கற்கவந்த மாணவர்:

உலகத்தை காப்பாற்றுகின்ற தலைவனே இங்கு

தங்கியது ஏனோ!

கலாச்சாரத்தினுடைய உயிர்நாடியை தாங்கிப்பிடிக்கும்

மாணவர்களிடத்தில் நாம் எதிர்பார்ப்பது:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமணத்திற்கு வருகை தந்து
தம்பதிகளை வாழ்த்தியருளிய
அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த
நன்றிகளை தெரிவிக்கிறோம்.



அன்புடன்

சிவஸ்ரீ. R.கங்காதரபட்டர்

ஸ்ரீமதி. G.கௌரி

17, ம.பொ.சி. தெரு,

எம்.ஜி.ஆர்.நகர்,

சென்னை - 78.

வாழ்த்துக்களுடன்..

ஆகாஷ் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், திருப்பரங்குன்றம்

Ph: 98422 55637, 3205500

Akash Printers